KAYALPATTINAM MUNICIPALITY
FORM 3
Minutes of the Meeting held on 24.01.2011

| Date of Council meeting | Decision Number | Subject in the Agenda | Decision of the Council |
|---|---|---|---|
| 24.01.2011 | 1 | **பொருள் எண்: 1**<br>காயல்பட்டணம் நகராட்சியில் வெள்ள நிவாரண பணிகள் 2010–2011 –க் கீழ் ரூ.15.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அதில் தேர்வுசெய்யப்பட்ட பணிகளுக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகளுக்கு மாவட்ட ஆட்சியர் தூத்துக்குடி அவர்களால் வழங்கப்பட்ட நிர்வாக அனுமதி கடிதம் ந.க.எண் ஐ4/55587/2010 தேதி 21.12.2010 மன்றத்தின் பார்வைக்கு. மேலும் தேர்வு செய்யப்பட்ட பணிகளுக்கு 29.12.2010 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. | அங்கீகரிக்கப்பட்டது |

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | அப்பாபள்ளி தெரு தார்சாலை சீரமைத்தல் | திரு.ஆர்.தலவாணிமுத்து காயல்பட்டணம் | மதிப்பீடு ரேட்டை விட 0.06 % குறைவு | |
| | | திருமதி.T.தங்கப்பூ காயல்பட்டணம் | மதிப்பீடு ரேட்டை விட 0.39%கூடுதல் | |
| 2 | உச்சிமாகாளியம்மன் கோவில் தெரு புறவழிச்சாலை முதல் காட்டு தைக்கா தெரு வரை தார்ச்சாலை சீரமைத்தல் | திரு.ஆர்.தலவாணிமுத்து காயல்பட்டணம் | மதிப்பீடு ரேட்டை விட 0.05%குறைவு | |
| | | திருமதி.T.தங்கப்பூ காயல்பட்டணம் | மதிப்பீடு ரேட்டை விட 0.37%கூடுதல் | |
| 3 | சொளுக்கார் தெரு தார்ச்சாலை சீரமைத்தல் | திரு.ஆர்.தலவாணிமுத்து காயல்பட்டணம் | மதிப்பீடு ரேட்டை விட 0.06%குறைவு | |
| | | திருமதி.T.தங்கப்பூ காயல்பட்டணம் | மதிப்பீடு ரேட்டை விட 0.38%கூடுதல் | |
| 4 | தீவுத்தெரு தார்ச்சாலை சீரமைத்தல் | திரு.ஆர்.தலவாணிமுத்து காயல்பட்டணம் | மதிப்பீடு ரேட்டை விட 0.05%குறைவு | |
| | | திருமதி.T.தங்கப்பூ காயல்பட்டணம் | மதிப்பீடு ரேட்டை விட 0.93%கூடுதல் | |
| 5 | அருணாச்சலபுரம் காலணி தார்ச்சாலை சீரமைத்தல் | திரு.ஆர்.தலவாணிமுத்து காயல்பட்டணம் | மதிப்பீடு ரேட்டை விட 0.06%குறைவு | |
| | | திருமதி.T.தங்கப்பூ, காயல்பட்டணம் | மதிப்பீடு ரேட்டை விட 0.39%கூடுதல் | |

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப் பட்டியல் தயாரிக்கப்பட்டதில் திரு.ஆர்.தலவாணிமுத்து காயல்பட்டணம் என்பவர் மதிப்பீடு ரேட்டை விட குறைவாக ரேட் கோரியிருப்பதால் அவரது ஒப்பந்தப்புள்ளியை அங்கீகரிக்கவும் மேற்படி பணிகள் திட்டப்பணியாக இருப்பதால் பணியின் அவசர அவசியம் கருதி குறைந்த ஒப்பந்தப்புள்ளியை நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று அங்கீகரித்ததையும் வேலை உத்திரவு வழங்கியதையும் நகர்மன்றம் அங்கீகரிக்க<br><br>
அலுவலக குறிப்பு–<br><br>
மேற்படி பணியானது திட்டப்பணிகளாக இருப்பதால் பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று குறைந்த ஒப்பந்தப்புள்ளியை அங்கீகரித்ததையும் வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
</td>
<td></td>
</tr>
<tr>
<td></td>
<td>2</td>
<td>
பொருள் எண்:-2<br>
இந்நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்திலுள்ள கிணற்றில் வண்டி மூலம் தண்ணீர் எடுத்துக் கொள்ள கட்டணம் வசூல் செய்யும் உரிமம் 01.01.2011 முதல் 31.12.2011 முடிய உள்ள காலத்திற்கு வேண்டி 28.12.2010-ம் தேதி அன்று நடைபெற்ற ஏலக்கேள்வியில் கீழ்கண்ட நான்கு நபர்கள் கலந்து கொண்டு கீழ்கண்டுள்ள தொகைக்கு ஏலம் கோரினர்.
<table>
<tr><th>வ.எண்</th><th>பெயர்</th><th>ஏலக்கேள்வித் தொகை ரூ.</th></tr>
<tr><td>1</td><td>M.B.ஜாகிர்உசேன்</td><td>1,35,000.00</td></tr>
<tr><td>2</td><td>S.பாரூக்</td><td>1,40,000.00</td></tr>
<tr><td>3</td><td>V.சங்கர்குமார்</td><td>1,36,000.00</td></tr>
<tr><td>4</td><td>கந்தன்</td><td>1,31,000.00</td></tr>
</table>
எனவே கடந்த ஆண்டைவிட ரூ. 36845.00 கூடுதலாக உள்ளதால் உயர்ந்தபட்ச ஏலக்கேள்விதாரர் திரு.S.பாருக் அவர்களுக்கு அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன்னனுமதி பெற்று உரிமம் வழங்கியதை மன்றம் அங்கீகரிக்க.<br>
அலுவலக குறிப்பு:-<br>
அவசர அவசியத்தை கருதி நகர்மன்ற தலைவரின் முன்னனுமதி பெற்று உரிமம் வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.
</td>
<td>அங்கீகரிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | 3 | **பொருள் எண்:-3**<br>காயல்பட்டணம் கடற்கரை பகுதியில் அமைந்திருக்கும் இந்நகராட்சிக்கு பாத்தியப்பட்ட சொந்தமான கடையில் கேன்டீன் நடத்தி வரும் வளர்பிரை சுயஉதவிக்குழுவின் உரிமம் 16.02.2011-ல் முடிவடைவதால் மேற்படி குழுவிற்கு மேலும் மூன்று ஆண்டுகளுக்கு உரிமத்தை புதுப்பித்து தாறுமாறு கேட்டுக் கொண்ட தலைவர் மற்றும் பொருளாளர், வளர்பிறை சுயஉதவிக்குழுவின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.<br><br>**அலுவலக குறிப்பு:-**<br>அரசு ஆணையின்படி மேலும் மூன்று ஆண்டுகளுக்கு உரிமம் வழங்கிட அங்கீகரிக்கலாம். | அங்கீகரிக்கப்பட்டது |
| | 4 | **பொருள் எண்:-4**<br>காயல்பட்டணம் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் தமிழக அரசின் உழவர் சந்தை காயல்பட்டணத்தில் ஏற்படுத்த கோரி சம்பந்தப்பட்ட துறையை கேட்டுக் கொள்ள வேண்டி கேட்டுக் கொண்ட 13-வது வார்டு உறுப்பினர் திரு.எம்.என்.சொளுக்கு முஹம்மது அப்துல் காதர் அவர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.<br><br>**அலுவலக குறிப்பு:-**<br>உழவர் சந்தை அமைத்திட அரசினை கேட்டுக் கொள்ள மன்றம் தீர்மானிக்கலாம் | அங்கீகரிக்கப்பட்டது |
| | 8 | **பொருள் எண்:-5**<br>இந்நகராட்சியில் உள்ள 18வார்டுகளுக்கும் தெருவிளக்குகள் பராமரிப்பதற்கு என நிரநதர பணியாளர்கள் கிடையாது. காயல்பட்டணம் வளர்ந்து வரும் பெருநகராமாக உள்ளது. ஆகவே மிகதிருப்திகரமாக தெருவிளக்கு பராமரிக்க இயலவில்லை. எனவே தெருவிளக்கு பராமரிப்பிற்குரிய அனைத்து பணிகளையும் உள்ளடக்கி தனியார்மயமாக்கும் விதமாயும் வருடாந்திர தெருவிளக்கு உதிரி சாமான்கள் மற்றும் பணியாளர்கள் சம்பளம், இவையாவும் நகராட்சி செய்யும் செலவினங்களைவிட தனியார்மயமாக்குவதால் நகராட்சிக்கு செலவினங்கள் குறையும் ஆகவே 2011-2012ஆம் ஆண்டிற்குறிய நகராட்சி தெருவிளக்கு பாராமரிப்பு தனியார் மயமாக்கும் கேட்டுக் கொண்ட நகர்மன்றத்துணைத்தலைவர் எம்.எ.கசாலி மரைக்கார் அவர்களின் கடிதம் மன்றத்தின் முடிவிற்கு | அங்கீகரிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | **அலுவலக குறிப்பு:-**<br>நகராட்சிப் பகுதியில் 1185 குழல் விளக்குகளும் 269 சோடியம் விளக்குகளும், 100 எண்ணம் எனர்ஜி சோலார் விளக்குகளும் 5 எண்ணம் உயர்மின் கோபுர விளக்குகளும் ஆக மொத்தம் 1554 விளக்குகளும் உள்ளது. இவற்றினை முறையாக பராமரிக்க நகராட்சி பணியாளர்கள் இல்லை. பணி ஏற்பாட்டின் அடிப்படையில் 3 பணியாளர்கள் மூலம் பராமரிக்க பணி நடைபெற்று வருகின்றது. இவர்களால் தெருவிளக்கு பராமரிப்பு பணிகளை செவ்வனே செய்ய இயலவில்லை. எனவே நகரில் உள்ள 18 வார்டுகளுக்கும் தெருவிளக்கு பராமரிக்க பணிகள் செய்ய தனியார் வசம் ஒப்படைக்கப்படும் இதற்காகும் தோராய செலவு ஓராண்டிற்கு ரூ. 12.00 லட்சம் மன்றம் அனுமதிக்கலாம். | |
| | 6 | **பொருள் எண் 6**<br>காயல்பட்டணம் நகராட்சியில் கோமான்புதூர் கிழக்கு தெரு, வடக்குத் தெரு மற்றும் நடுத்தெரு சாலைகள் மழைக்காலங்களில் தண்ணீர் தேங்கிவிடுவதால் பொதுமக்கள் மிகவும் சிரமப்படுவதால் அந்த சாலைகளை சிமெண்ட் சாலைகாளை சிமெண்ட் சாலைகனாக உயர்த்தி தருமாறு கேட்டுக் கொண்ட நகர்மன்ற தீர்மானம் எண்:-802 நாள்:-29.12.2010 நகராட்சி பணிமேற்பார்வையாளர் மற்றும் நகராட்சிப் பொறியாளர் மற்றும் நகராட்சிப் பொறியாளர்(பொ) அவர்களால் தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.7.40 இலட்சம் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.<br>**அலுவலககுறிப்பு :**<br>நகராட்சிப் பணிமேற்பார்வையாளர் மற்றும் நகராட்சிப் பொறியாளர்(பொ) அவர்களால் தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.7.40 அரசுதிட்டநிதியில் இப்பணி செய்ய **மன்றம் அங்கீகரிக்கலாம்.** | அங்கீகரிக்கப்பட்டது |
| | | | |